தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1982 ஏப்ரல் 1

பங்குனி 19, துன்மதி — திருவள்ளுவர் 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அ மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இரா அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லுவார்''

கற்றவரின் முன், தாம் கற்றவற்றை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரிலும் மிகக் கற்றவராக மதித்துப் போற்றப்படுபவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடிசைவாசிகளிடமிருந்து வசூலிக்கப்படும் மின் கட்டணம்.

*வினா எண் 699— திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைகளுக்கு மின் கட்டணம் வசூல் செய்வதை கிராமப்புறங்களுக்கு முகாமிட்டு வசூல் செய்யும் காசாளர்கள் வாங்காமல் குடிசை வாசிகளே நேரில் சென்று செலுத்தச் சொல்லுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிசை வாசிகள் சிரமங்கள் போக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) சாதாரண மின் பயனீட்டாளர்களைப் போல் அல்லாமல் குடிசைவாசிகள் பிரிவு அலுவலகத்தில் இதற்கென அமர்த்தப்பட்டுள்ள வணிக உதவியாளர்களிடம் நேரடியாக மின் கட்டணத்தைச் செலுத்தலாம். ''அட்டைப்பட்டியல் முறை'

முழுமையாக அமுலாக்கப்பட்ட பின் குடிசைவாசிகளிடம் அந்தந்த இடத்திலே பணியாற்றும் லைன்மேன்கள் மூலம் மின் கட்டணம் வசூலிக்கலாமா என்பதுபற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில், கிராம மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 2.50 என்ற அளவுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், அந்த பில் கட்டணத்தை கிராமங்களிலே குடிசைகளிலே வசிக்கக்கூடியவர்கள், வெளியே சென்று கட்டுவதற்கு அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, லைன்மேன்கள் ஸ்டாப் மூலமாகவே நேரடியாக, அந்த இடங்களுக்குச் சென்று மின் கட்டணத்தை வசூலிக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. அரசு பரிசீலிக்கும்.

மின் உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் தனிப்பிரிவுகள் அமைக்கும் திட்டம்

*வினா எண் 700—திரு. பி. எஸ். பரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் திட்டத்தில் உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் இரு தனிப்பிரிவுகள் அமைப்பது பற்றி தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மின் நிர்வாகத்திறனை சீர்படுத்தும் நோக்கத்தில் மின் உற்பத்தி செய்வதை தற்போது உள்ளதுபோல தமிழ்நாடு மின் வாரியத்திடமும், மின் விநியோகம் மற்றும் மின்சக்தி செலுத்துதல் ஆகிய பணிகளை மண்டலங்கள் வாரியாக கம்பெனிகளை அமைத்து, அக் கம்பெனிகளின் பொறுப்பில் விட்டு விடலாம் என்றதொரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பொருள்மீது அட்வகேட் ஜெனரலின் சட்ட ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பட்ட பின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS